


**17. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் முதலாவது படுக்கை வசதிகொண்ட வந்தேபாரத் ரயில் சேவையை பிரதமர் திரு. நரேந்திரமோடி, மேற்குவங்க மாநிலத்தில் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

2. காணும் பொங்கல் விழாவை தமிழக மக்கள் உற்சாகத்துடன் இன்று கொண்டாடி வருகின்றனர்.

3. மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா களைகட்டியுள்ளது.

ஜல்லிக்கட்டு போட்டிகளில் வெற்றி பெறும் மாடுபிடி வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், கால்நடை பராமரிப்பு துறையில் அரசு வேலை வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.

4. தமிழ்நாட்டில் அஇஅதிமுக ஆட்சி அமைந்தால் மகளிருக்கு மாதம் 2 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அறிவித்துள்ளார்.

5. ஸிம்பாப்வேயில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான உலக கோப்பை ஆடவர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷிற்கு எதிராக இந்தியா முதலில் பேட் செய்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டின் முதலாவது படுக்கை வசதிகொண்ட வந்தேபாரத் ரயில் சேவையை பிரதமர் திரு. நரேந்திரமோடி, மேற்குவங்க மாநிலம் மால்டா ரயில் நிலையத்தில் சற்றுமுன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நியூ ஜல்பகுரி – நாகர்கோவில்,

ஜல்பகுரி - திருச்சிராப்பள்ளி இடையேயான அம்ரித் பாரத் விரைவு ரயில் சேவைகளையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் 3 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான ரயில் மற்றும் சாலை கட்டமைப்பு திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

பிரதமர் இன்று மாலை அசாம் தலைநகர் குஹாட்டியில் போடோ சமூக மக்களின் பாரம்பரிய கலாச்சார நிகழ்ச்சியிலும் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

காணும் பொங்கல்

பொங்கல் திருநாளின் 4-வது விழாவான காணும் பொங்கலை தமிழக மக்கள் உவகையுடனும், உற்சாகத்துடனும் கொண்டாடி வருகின்றனர்.

இந்நாளில் மக்கள் உறவினர்களையும், நண்பர்களையும் சந்தித்து மகிழ்ச்சிகளையும் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொள்வதுடன், சுற்றுலா தலங்களுக்கு குடும்பத்தினருடன் சென்று இன்பமாக பொழுதை கழிப்பது வழக்கமாகும்.

சென்னை மெரினா கடற்கரை, திருச்சி முக்கொம்பு, கல்லணை, மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவில், கன்னியாகுமரி விவேகானந்தர் நினைவிடம், அரியலூர் கங்கை கொண்டசோழபுரம், நாகை வேளாங்கண்ணி உள்ளிட்ட பல்வேறு சுற்றுலா தலங்களில் மக்கள் கூட்டம் அலை மோதுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

ஜல்லிக்கட்டு

காணும் பொங்கலை ஒட்டி மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

காலை 7 மணிக்கு தொடங்கிய இப்போட்டியில் வாடிவாசலில் இருந்து வெளியேறிய ஆயிரக்கணக்கான காளைகளை அடக்க, 550-க்கும் அதிகமான மாடுபிடி வீரர்கள் களமிறங்கியுள்ளனர்.

முன்னதாக இன்று காலை இப்போட்டிகளை பார்வையிட்ட முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் ஜல்லிக்கட்டு போட்டிகளில் வெற்றி பெறும் சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், கால்நடை பராமரிப்பு துறையில் அரசு வேலை வழங்கப்படும் என்று அறிவித்தார்.

மதுரை அலங்காநல்லூரில் ஏறுதழுவுதல் பயிற்சி மற்றும் உயர்தர சிகிச்சை மையம் அமைக்கப்படும் என்றும் கூறினார்.

.. வாய்ஸ் ..

வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாட்டை சேர்ந்த சுற்றுலா பயணிகள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் இப்போட்டியை ரசித்து வருகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

சிவகங்கை வாய்ஸ் ..

பிரசித்தி பெற்ற சிவகங்கை சிராவயல் மஞ்சு விரட்டை ஒட்டி தொழுவத்திலிருந்து சீறிப்பாய்ந்த 500-க்கும் மேற்பட்ட காளைகளை மாடுபிடி வீரர்கள் எதிர்கொண்டு அடக்கி வருவதை ஏராளமானோர் கண்டுகளிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

நாகை வாய்ஸ்

தமிழகத்தின் பல்வேறு நீர் நிலைகளில் மக்கள் ஒன்றுகூடி காணும் பொங்கலை உற்சாகமாக கொண்டாடி வரும் நிலையில் நாகை வேளாங்கண்ணி உள்ளிட்ட மாவட்டத்தின் சுற்றுலா தளங்களில் மக்கள் கூட்டம் கூட்டமாக குழுமியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ்...

❖❖❖❖❖❖❖❖❖

M.G.R.

தமிழக முன்னாள் முதலமைச்சர் டாக்டர். M.G. ராமச்சந்திரனின் 109-வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி வெளியிட்ட செய்தியில் தமிழகத்தின் வளர்ச்சியிலும், தமிழகத்தின் கலாச்சாரத்தை முன்னெடுத்து செல்வதிலும் எம்.ஜி.ராமச்சந்திரன் அளப்பறிய பங்காற்றியதாகவும் புகழாரம் சூட்டினார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில் ஏழைகள் மற்றும் விளிம்பு நிலை மக்களின் நலனுக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் என்று எம்.ஜி.ஆர் என்று குறிப்பிட்டார்.

தமிழக பள்ளிகளில் சத்துணவு திட்டம், கல்விக்கான நலத்திட்டங்கள், ஊழலற்ற நிர்வாகம், பெண்களுக்கான நலத்திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தியவர் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

சென்னை, கிண்டி M.G.R. மருத்துவ பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு தமிழக அரசின் சார்பில் மாநில அமைச்சர்கள் மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினர்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி சென்னை ராயபுரத்தில் அஇஅதிமுக தலைமையகத்தில் உள்ள M.G.R. திருவுருவச்சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖❖❖

கஜேந்திரசிங் ஷெகாவத்

அரசியல் மற்றும் சமூகத்துறையில் இருப்பவர்களுக்கு எம்.ஜி.ராமச்சந்திரன் உந்து சக்தியாக தகிழ்ந்தவர் என மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

பொள்ளாச்சி பேருந்து நிலையம் முன்பு அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆரின் திருவுருவச்சிலைக்கு மலர்த்தூவி மரியாதை செலுத்திய பின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வாழ்நாள் முழுவதும் உழைத்தவர் என கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

எடப்பாடி கே. பழனிச்சாமி

தமிழ்நாட்டில் அஇஅதிமுக ஆட்சி அமைந்தால் மகளிருக்கு மாதம் 2 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று முதல்கட்ட தேர்தல் வாக்குறுதிகளை வெளியிட்ட அவர், குலவிளக்கு திட்டத்தின்கீழ் இந்த உதவித்தொகை வழங்கப்படும் என்றார்.

ஆண்களுக்கு கட்டணமில்லா நகரப்பேருந்து திட்டம் செயல்படுத்தப்படும்,

அம்மா குடியிருப்பு திட்டத்தின் கீழ் மனை வாங்கி வீடுகள் கட்டித்தரப்படும்,

5 லட்சம் பெண்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க 25 ஆயிரம் ரூபாய் மானியம் அளிக்கப்படும் என்றும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

ஹஜ் பயணம்

ஹஜ் புனித பயணத்திற்கு விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு வரும் 25-ம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும் காலநீட்டிப்பு வழங்கப்பட மாட்டாது என்று மத்திய சிறுபான்மை விவகாரங்களுக்கான அமைச்சகம் தெளிவு படுத்தியுள்ளது.

எனவே யாத்ரிகர்கள் இந்த கால நீட்டிப்பை பயன்படுத்தி தேவையான முன்னேற்பாடுகளை செய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

கே.ஆர் பெரியகருப்பன்

தமிழகத்தில் பொங்கல் பரிசு தொகுப்பாக 2 கோடி 15 லட்சம் பயனாளர்களுக்கு, 6 ஆயிரத்து 454 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர் பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதன்மூலம் 97 சதவிகித குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்து உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக அயராது பணிகளை மேற்கொண்ட கூட்டுறவுத்துறை பணியாளர்கள், அலுவலர்களுக்கு அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

இருவாரி

திருவள்ளூர் வைத்ய வீரராகவ பெருமாள் திருக்கோவிலில் தை பிரம்மோற்சவத்தை முன்னிட்டு கருட சேவை இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

கருட வாகனத்தில் எழுந்தருளிய ஸ்ரீதேவி, பூதேவி சமேத வீரராகவ பெருமாளை ஏராளமானோர் தரிசித்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

வடகிழக்கு பருவமழை அடுத்த 48 மணிநேரத்தில் தமிழகம் மற்றும் தென்னிந்திய பகுதிகளிலிருந்து விலகுவதற்கான வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதியில் சூறாவளி காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்று இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஸிம்பாப்வேயில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான உலக கோப்பை ஆடவர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷிற்கு எதிராக முதலில் பேட் செய்யும் இந்தியா

சற்றுமுன்

9 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 45 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக டாஸ் வென்ற பங்களாதேஷ் பந்து வீச தீர்மானித்தது.

❖❖❖❖❖❖❖❖❖

மகளிர் கிரிக்கெட்

நவி மும்பையில் நடைபெறும் மகளிர் பிரிமியர் லீக் 20 - 20 கிரிக்கெட் போட்டியில் யூ.பி. வாரியர்ஸ் – மும்பை இண்டியன்ஸை இன்று பிற்பகல் 3 மணிக்கு எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் டெல்லி கேப்பிட்டல்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களுருவுடன் இரவு ஏழரை மணிக்கு மோதுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖